## கருப்பு-சிவப்பு புத்தகமும் குறியீடும்!

18-வது மக்களவையின், முதல் கூட்டத்தொடர் கடந்த 24-ஆம் தேதி தொடங்கியதும், புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டத்தொடரின் 2-வது நாளில் தமிழ்நாடு, புதுச்சேரி உறுப்பினர்கள் தமிழில் உறுதிமொழி வாசித்து பதவி ஏற்றனர். மத்திய சென்னை எம்.பி, தயாநிதி மாறன் தமிழில் உறுதிமொழி ஏற்றதுடன், 'நீட் வேண்டாம், நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும்' என முழக்கமிட்டார். குறிப்பாக, இந்தியா கூட்டணியின் பெருவாரியான உறுப்பினர்கள் 'வாழ்க இந்திய அரசியலமைப்புச் சட்டம்', 'வாழ்க தேசிய ஒருமைப்பாடு' என முழக்கங்களை எழுப்பியது கவனிக்க வைத்தது. அதிலும் குறிப்பாக, இந்திய அரசியலமைப்புச் சட்ட நூலை கையில் ஏந்தியபடி, ராகுல்காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் உறுதிமொழி வாசித்தது, கவனம் ஈர்த்தது.

அது குறித்து, சமூக வலைத்தளங்களில் வீச்சாக இயங்கி வரும், தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின், வேறொரு பார்வையினை முன்வைத்துள்ளார். அவரது பதிவில், "கருப்பும் சிவப்பும் இந்திய தேசியக் கொடியில் இடம்பெறாத வண்ணங்கள். எனினும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்துகின்ற கூட்டாட்சி தத்துவத்தினை முன்னிறுத்தி, மாநில சுயாட்சிக்கானக் குரலை ஓங்கி ஒலித்து வருகின்றது கருப்பு-சிவப்பு இயக்கம். அண்ணா, கலைஞர், கழகத் தலைவர் எனத் தொய்வின்றித் தொடர்கிறது ஜனநாயக முழக்கம்.

பல்வேறு வண்ணங்களில் அரசியல் சட்டப் புத்தகம் வெளியாகி இருந்தாலும், கருப்பு-சிவப்பு அட்டையுடனான இந்திய அரசியல் சட்டப் புத்தகத்தை கையில் ஏந்தி, பலரும் உறுதிமொழி ஏற்றிருப்பது இயல்பாக நடந்த வரலாற்றுக் குறியீடு." எனக் குறிப்பிட்டுள்ளார். உண்மைதான், கருப்பு-சிவப்பு கழகத்தின் முயற்சியே,'ஒன்றிய ஆளும் அரசுக்கு எதிராக வலிமையான வகையில் 'இந்தியா கூட்டணி' உறுப்பினர்களைக் கொண்டு சென்றது என்றால், மிகையில்லை.

## :ப்ளாஷ்பேக்





கார்த்திக் கே.செல்வராஜ்

### தளபதிக்கு ஆளுயர மாலை!

1990-ஆம் ஆண்டு, கோவை மாநகரில் 72 வார்டுகளில் கழக இளைஞர் அணி சார்பில், கொடியேற்று விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்த தளபதி அவர்களுக்கு ஆளுயர மாலை அணிவித்து வரவேற்பு அளித்தோம். இந்தப் படத்தில் அன்றைய மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கோ.மோகன்குமார், மறைந்த வட்டச் செயலாளர்கள் மீசை மணி, செல்வபுரம் கருணாநிதி ஆகியோருடன் நானும் இடம்பெற்றுள்ளேன்.

**– கார்த்திக் கே.செல்வராஜ், மாமன்ற உறுப்பினர், ஆர்.எஸ்.புரம் பகுதிக் கழகச் செயலாளர், கோவை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### குன்றத்தூர் பொதுக்கூட்டம் – துப்பாக்கிச்சூடு!

1950-ஆம் ஆண்டு, 'ஆரியமாயை' 'பொன்மொழிகள்' ஆகிய நூல்களுக்காக திருச்சி நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் சிறையில் அடைக்கப் பட்டதைக் கண்டித்து, குன்றத்தூரில் கூட்டம் நடத்த கழகத்தினர் ஏற்பாடு செய்தனர். இந்தக் கூட்டத்தை நடத்தக் கூடாது என போலீசார் தடை விதித்தனர். தடை இரண்டு மாதங்களுக்கு மேல் நீண்ட நிலையில், தடையை மீறி பொதுக்கூட்டம் நடத்துவது என முடிவு செய்யப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. போலீசார் 144 தடை விதித்த நிலையில், கழகத்தினர் அணி அணியாகத் திரண்டனர். போலீசார் அடி, உதைத் தாக்குதல்கள், எட்டு முறை துப்பாக்கிச் சூடும் நடத்தினர். கைது செய்யப்பட்ட கழகத்தினர் தொடர்பான வழக்கு இரண்டு ஆண்டுகளுக்கு நடைபெற்றது.


## சீரணி ⟹ இளைஞர் அணி

17

### ந.வினோத்குமார்

**தி.மு.கழகத்தால் இளைஞர்களும், இளைஞர்களால் கழகமும், இந்த இருவரால் தமிழ்ச் சமூகமும் கண்ட மேம்பாடு குறித்துப் பேசும் தொடர் 'சீரணி முதல் இளைஞர் அணி வரை'...**

## சீரணியினர் தந்த அறிவகமும் சிலையும்!




பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் நாள் காலமான பிறகு, அவர் தொடங்கிய சீரணியை முன்னிட்டு, இரண்டு முக்கியமான விஷயங்கள் நடைபெற்றன. அவை காலம் கடந்தும் பேர் சொல்லும் கட்டுமானங்களாக நிலைகொண்டுள்ளன.

ஒன்று, திருச்சி மாவட்டத்தில் உள்ள மாவலிப்பட்டி ஊராட்சியில் சீரணித் தொண்டர்களால் 1969 -ஆம் ஆண்டு ஜூன் 23 அன்று 'அண்ணா அறிவகம்' திறக்கப்பட்டது. இரண்டு, 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை சீரணி அலுவலகத்தில் அண்ணாவின் மார்பளவு திருவுருவச் சிலை திறந்துவைக்கப் பட்டது.

சீரணியினர் சேர்ந்து திருச்சி, மாவலிப்பட்டியில் உருவாக்கிய **'அண்ணா அறிவகம்'** குறித்து, அந்த ஊரைச் சேர்ந்த வீ.ராமச்சந்திரன் என்ற கழக உடன்பிறப்பு கூறும்போது, "எனது தந்தை ச.வீரையா 1969-இல் சீரணி உறுப்பினராக இருந்தார். அவர் காலத்தில்தான் 'அண்ணா அறிவகம்' கட்டப்பட்டது. அதனை நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்" என்றார்.

தற்போது, மாவலிப்பட்டி ஊராட்சியின் கீழ் இருக்கும் அந்தக் கட்டடத்தை, மீண்டும் கழகத்தின் கைகளுக்குக் கொண்டு வர வேண்டும் என்பது அங்குள்ள கழகத்தினரின் எதிர்பார்ப்பு.



**'என்னுடைய பிரிவையும் தாங்கிக் கொள்ளும் இதயம் உனக்கு வேண்டுமடா தம்பி' என்பதற்காகத்தான் அப்படிக் கூறினார்கள் போலும்!**

அடுத்து, அண்ணாவின் பிறந்தநாளை முன்னிட்டு, 1969-ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று, சென்னையில் அரசினர் தோட்டத்தில் இருந்த சீரணி அலுவலகத்தில், அண்ணா சிலையை, அன்று முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்.

அந்தச் சிலைத் திறப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிய அன்றைய சீரணி அமைச்சர் மா.முத்துசாமி அவர்கள் பேசும்போது, "அண்ணா மறைந்தாலும் அவர் காட்டிச் சென்ற கொள்கைகள் நம்மை வழிநடத்திச் செல்லும். சீரணித் தொண்டர்கள் செய்யும் சிறப்பான பணிகளை மக்கள் போதிய விளம்பரம் செய்ய முடியவில்லை'' என்றார். பிறகு, அந்தச் சிலையைச் செதுக்கிய சிற்பி எஸ்.பி.பிள்ளைக்கு மேயர் வேலூர் நாராயணன் சிறப்புச் செய்தார்.

தொடர்ந்து கலைஞர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டதாவது: ''அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய சீரணி ஒரு சர்வகட்சி அமைப்பு அல்ல. கட்சி சார்பில்லாத அமைப்பு. இந்தச் சீரணியில் கட்சி வேறுபாடுகளின்றி, அனைவரும் பங்குபெற வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் அண்ணா அவர்களின் சிலையைத் திறந்தோம். ஆனால், இன்று அண்ணா அவர்கள் நம்மிடம் இல்லாத நிலையில், இந்தச் சிலைத் திறப்பு விழாவினை நடத்துவோம் என்று நம்மில் யாரும் எதிர் பார்க்கவில்லை. அண்ணா அவர்கள் எத்தனையோ பணிகளை நமக்கு அளித்துச் சென்றார்கள். அவைகளிலே ஒன்றுதான் சீரணியும். அண்ணா அவர்கள் நம்மோடு இருந்த நாட்களில் எத்தனையோ கருத்துகளைச் சொன்னார்கள்.

'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்று பிறரை நாம் மதிக்கக் கற்றுக் கொடுத்தார். 'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' என்று பெருமிதம் கொள்வார். 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்று உற்சாகமூட்டுவார். எல்லாவற்றையும் விட, 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்று அடிக்கடி கூறுவார். 'என்னுடைய பிரிவையும் தாங்கிக் கொள்ளும் இதயம் உனக்கு வேண்டுமடா தம்பி' என்பதற்காகத்தான் அப்படிக் கூறினார்கள் போலும்!

இங்கே பேசிய அமைச்சர் முத்துசாமி சீரணியின் பணிகளுக்குப் போதிய விளம்பரம் இல்லை என்று தெரிவித்தார். இவை தாமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. நாமாகச் செய்துகொள்ள வேண்டும். பொதுக்காரியங்கள் நடைபெறும்போது விளம்பரங்கள் செய்துகொள்வதில் தவறு எதுவும் இல்லை. எவ்வளவு பணம் செலவானாலும், விளம்பரம் செய்யலாம். ஆனால், அதற்குத் தக்க பணிகளும் இருக்க வேண்டும்!"

**...வெற்றிநடை போடும்.**

## பொய்ப்பெட்டி

17

### கோவி.லெனின்

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் – விடையும்..."

## எழுத்தாளர்கள் ஏன் புலம்ப வேண்டும்?



***சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்களுக்குக் கிடைத்த தொகையைவிட, விஷச்சாராயம் குடித்து செத்த குடிகாரர்களுக்கு அதிக தொகை தரப்படுவதாக எழுத்தாளர்கள் ஏன் புலம்ப வேண்டும்?***

ஓர் எழுத்தாளர் முதலில் புலம்பினார். அதைப் பார்த்து, மேலும் சிலர் கூட்டு சேர்ந்து புலம்பத் தொடங்கினர். அந்த எழுத்தாளர்கள் புலம்பும்போது, என்ன நிலையில் இருந்தனரோ!

தமிழ்நாடு அரசு நிவாரணம் கொடுத்திருப்பது குடிகாரர்களுக்கு அல்ல, விஷச்சாராயம் குடித்து இறந்துபோனவர்கள் குடும்பத்தினரின் எதிர்கால நலனுக்காகத்தான். கள்ளக்குறிச்சியில் சற்றும் எதிர்பாராத ஒரு விபரீதம் நடந்த நிலையில், குடித்து இறந்து போனவர்களின் மனைவி, பிள்ளைகள், குடும்பச் சூழல் இவற்றைக் கருத்திற்கொண்டு முதலமைச்சர் உடனடியாக, ரூ.10 இலட்சம் நிவாரணத் தொகை என அறிவித்தார். மேலும் இளைஞர் நலன் துறை அமைச்சர், பொதுப்பணித் துறை அமைச்சர் உள்ளிட்டவர்களும் நேரில் சென்று, பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு அந்தத் தொகையை வழங்கினர். நடந்த நிகழ்வை நியாயப் படுத்தாமல், ஓடி ஒளியாமல், பொறுப்பும் அக்கறையும் உள்ள திராவிட மாடல் அரசின் செயல்பாடு இது.

மணிப்பூர் கலவரத்தின் போது எட்டிப் பார்க்காத பிரதமர், தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டை டி.வி.யில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன் என்ற முன்னாள் முதல்வருடன் ஒப்பிடும்போது, திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் எதையும் எதிர்கொள்ளும் வலிமையும் அக்கறையும் உள்ளவராக இருப்பதால்தான், விஷச்சாராய உயிரிழப்புகளால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் எதிர்காலத்தை அரசாங்கமே பாதுகாக்கும் வகையில், நிவாரணத் திட்டங்களை அறிவித்திருக்கிறார்.

அதே நேரத்தில், எழுத்தாளர்களை, திராவிட மாடல் அரசு எந்தளவு போற்றுகிறது என்பதற்கு, அவர்களுக்கான விருதுகளும், **'கனவு இல்லம்'** திட்டமும் சாட்சியங்களாக இருக்கின்றன. வாழும்போது எழுத்தாளர்களைப் போற்றுவதில்லை என்கிற குறையைப் போக்கும் வகையிலான 'கனவு இல்லம்' திட்டத்தில். எழுத்தாளர்கள் விரும்பும் மாவட்டத்தில் அரசு வீடு ஒதுக்குகிறது. அவர்களது மறைவின்போதும் அரசு மரியாதை என்பதைக் கடைபிடிக்கிறது திராவிட மாடல் அரசு.

எழுத்தாளர் கி.ராஜநாராயணன், தமிழறிஞர் இளங்குமரனார், தமிழறிஞர் ஔவை நடராசன் ஆகியோர் மறைவின்போது அரசுத் தரப்பில் செலுத்தப்பட்ட அரசு மரியாதையை புலம்பல் எழுத்தாளர்களும் அறிந்திருப்பர்.

எழுத்தாளர் ஜெயகாந்தன் மறைந்தபோது, அப்போதைய அ.தி.மு.க அரசு அவருக்கு ஒரு மலர்வளையம்கூட வைக்கவில்லை. ஆனால், அன்றைய தி.மு.க. தலைவர் கலைஞரும், பொருளாளராக இருந்த இன்றைய முதலமைச்சர் அவர்களும் நேரில் சென்று இறுதிமரியாதை செலுத்தினர். இவற்றையெல்லாம் அறியாதவர்களல்ல அந்த எழுத்தாளர்கள்.


ஒரு நிகழ்வில் எந்தவித பாதிப்பும் அடையாதவர்கள், எப்படியும் புலம்பலாம், மீம்ஸ் போட்டு கேலி செய்யலாம், வக்கணை பேசலாம். பாதிக்கப்பட்டவர்களின் வலி அறிந்தவர்களால்தான் உரிய வகையில், உதவிட முடியும். அதைச் செய்திருக்கிறார் தாயுமானவரான முதலமைச்சர்.

**...வினா தொடரும்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

522

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131